# 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மாணவர் சங்க துணைவிதிகள்
# களனிப் பல்கலைக்கழகம்
# களனி

1985 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க பல்கலைக்கழக (திருத்திய) சட்டங்களின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 135 ஆவது பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய 112(3) ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் 507/15/07 ஆம் இலக்க 11.10.2022, 508/02/04 ஆம் இலக்க 08.11.2022, 509/19/14 ஆம் இலக்க 13.12.2022 ஆகிய திகதிகளில் நடைபெற்ற களனிப் பல்கலைக்கழக பேரவையின் சிபார்சுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இத்துணைவிதிகள், மாணவர் சங்கம் தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படுவதுடன் இத்துணைவிதிகள் பேரவையினால் அனுமதிக்கப்பட்ட திகதியிலிருந்து அதாவது 14.02.2023 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

மாணவர் சங்கம் தொடர்பான 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க துணைவிதி மற்றும் அது தொடர்பாக நடைமுறையில் உள்ள பிற துணைவிதிகள் யாவும் 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க துணைவிதிகள் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து இரத்து செய்யப்படுகின்றபோதிலும், 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க துணைவிதிகளின் கீழ் இதுவரை பல்கலைக்கழகம் எடுத்த முடிவுகளுக்கு இது எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது.

1. இத்துணைவிதிகள், 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மாணவர் சங்க துணைவிதிகள் என அடையாளப்படுத்தப்படும்.

2. (I) களனிப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது (இதற்கப்பால் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என குறிப்பிடப்படும்) பல்கலைக்கழகத்தின் அனைத்து இளமாணிப்பட்டக் கற்கை மாணவர் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும்.

   (II) பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமானது, ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்தின் அனைத்து அலுவலர்களையும் மற்றும் உறுப்பினர்களையும் கொண்டமைந்ததாக இருத்தல் வேண்டும்.

   பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள் இத்துணைவிதிகளின் 17 ஆவது பந்தியின் விதிகளின்படி தமக்குள் இருந்து பின்வரும் அலுவலர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

   (அ) தலைவர்
   (ஆ) துணைத் தலைவர்
   (இ) செயலாளர்
   (ஈ) பத்திராதிபர்
   (உ) இளம்பொருளாளர்

   (III) பல்கலைக்கழக மாணவர் சமூகத்தைப் பொறுத்தமட்டில், குறித்த பகுதியினரில் பெண் மாணவிகளே அதிகளவில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளமையினால், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பைத் தீர்மானிப்பதில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படுதல் வேண்டும்.

3. (I) களனிப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு பீடத்திற்கும் பீட மாணவர் ஒன்றியம் இருத்தல் வேண்டும்.

   (II) ஒரு பீட மாணவர் சங்கமானது, அந்த பீடத்தின் அனைத்து பதிவு செய்யப்பட்ட முழுநேர பட்டக்கற்கை மாணவர்களினைப் பிரதிநிதித்துவம் செய்தல் வேண்டும்

என்பதுடன் அப் பீட மாணவர் சங்கத்தின் அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்கள் அந்த பீடத்தின் பட்டக்கற்கை மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(III) பீட மாணவர் ஒன்றியம் பின்வரும் கட்டமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- (அ) தலைவர்
- (ஆ) துணைத் தலைவர்
- (இ) செயலாளர்
- (ஈ) பத்திராதிபர்
- (உ) இளம்பொருளாளர் மற்றும்
- (ஊ) கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறான எண்ணிக்கையுடையை உறுப்பினர்கள்.
  - (அ) இருநூறு அல்லது அதற்கும் குறைவான பதிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு பீடத்திற்கு இரண்டு உறுப்பினர்கள்,
  - (ஆ) இருநூறு முதல் ஒரு நாநூறு வரை பதிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு பீடத்திற்கு பிரிவுக்கு நான்கு உறுப்பினர்கள்,
  - (இ) நாநூறு முதல் அறுநூறு வரை பதிவுசெய்யப்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு பீடத்திற்கு ஆறு உறுப்பினர்கள்,
  - (ஈ) அறுநூறுக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட மாணவர்களைக் கொண்ட ஒரு பீடத்திற்கு எட்டு உறுப்பினர்கள்,
  - (உ) மேற்படி சங்கத்தால் பரிந்துரைக்கப்படும், பீடத்தின் சிரேஷ்ட ஆசிரியராக இருக்கும் ஒருவரை ஒவ்வொரு பீட மாணவர் சங்கங்களிற்குமான சிரேஷ்ட பொருளாளராக பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(IV) பல்கலைக்கழக மாணவர் சமூகத்தைப் பொறுத்தமட்டில், குறித்த பகுதியினரில் பெண் மாணவிகளே அதிகளவில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளமையினால், பீட மாணவர் ஒன்றியத்தின் அமைப்பைத் தீர்மானிப்பதில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படுதல் வேண்டும்.

4. பீட மாணவர் சங்கத்தின் அலுவலர்கள் மற்றும் பிற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்திலும் சரியான பதிவைக் கொண்ட மாணவர்கள் வாக்காளர்களாக இருத்தல் வேண்டும்.

5. (அ) தேர்தல் நடைபெறும் கல்வியாண்டில் அந்த பீடத்தில் முழுநேர மாணவராக முறையாகப் பதிவு செய்யப்படவில்லை என்றால்,
(ஆ) பீடம் மற்றும்/அல்லது பல்கலைக்கழகத்தால் அவருக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தால்,
(இ) வாக்களிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்தில், அவர் பல்கலைக்கழகத்திற்கு ஏதேனும் பணம் செலுத்த வேண்டியிருப்பின் அந்தப் பணத்தை திருப்பிச் செலுத்துவதற்காக பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளாமல் இருந்தால்,

அவ்வாறான மாணவர் தேர்தலில் வாக்களிக்கவோ அல்லது தேர்தலில் போட்டியிடுவதற்கோ உரிய தகுதியை இழந்தவராவார்.

6. (I) ஒவ்வொரு கல்வியாண்டின் இரண்டாவது அரையாண்டின் பத்தாவது வாரத்தின் கடைசி வேலை நாளுக்கு முன்னர், பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அடுத்த ஆண்டுக்கான பீட மாணவர் சங்கங்களை நிறுவுவதற்கான பின்வரும் விடயங்கள் அடங்கிய அறிவிப்பினை பல்கலைக்கழகத்தினுள் வெளியிடுதல் வேண்டும்.
- (அ) ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்தின் பெயர்
- (ஆ) ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர்கள் மற்றும் பிற உறுப்பினர்களின் எண்ணிக்கை.

(இ) பீட மாணவர் சங்கத்தின் அலுவலர்கள் மற்றும் பிற உறுப்பினர்களுக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்ற மாணவர்களின் பெயர்கள் (இதற்கப்பால் தகுதியுள்ள மாணவர்கள் என குறிப்பிடப்படும்).
முதலாவது சங்கத்தின் அலுவலர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் மேற்படி அறிவிப்பு வெளியிடப்படும்.

(II) பீட மாணவர் சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஏனைய உறுப்பினர்களின் எண்ணிக்கை முறைப்படி தீர்மானிக்கப்பட்டதா, அல்லது ஒரு மாணவர் தேர்தலில் வாக்களிப்பதற்கு அல்லது போட்டியிடுவதற்கு தகுதியுள்ளவரா என்பவை பற்றிய ஏதேனும் வினாக்கள் பல்கலைக்கழக பிரதான நிறைவேற்று அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இவ்விடயத்தில் பிரதான நிர்வாக அதிகாரியின் முடிவே இறுதி முடிவானதாக இருத்தல் வேண்டும்.

7. பிரதான நிறைவேற்று அதிகாரி, பந்தி 6 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டு ஏழு வேலை நாட்களுக்குள், பீட மாணவர் ஒன்றியத்தின் அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களின் தேர்தலை நடாத்துவதற்காக ஒவ்வொரு பீடத்தின் பீடாதிபதியினை தேர்தல் அதிகாரியாக நியமித்தல் வேண்டும்.

8. (I) பீட மாணவர் சங்கத்தின் அலுவலர்கள் மற்றும் பிற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அதிகாரியால் நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்திற்கும் ஒரு திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவை பிரதான நிறைவேற்று அதிகாரியினால் நிர்ணயிக்கப்படல் வேண்டும். அத்தகைய திகதி பந்தி 6 (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பு வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஏழு வேலை நாட்கள் முடிவடைந்த ஒரு நாளாகவும், பதினான்கு வேலை நாட்கள் முடிவடைவதற்கு முன்பான ஒரு நாளாகவும் இருத்தல் வேண்டும்.

(II) பல்கலைக்கழகத்தின் பதிவாளர், ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்தின் பதவிகளுக்கான தேர்தல் வேட்பாளர்களின் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை பல்கலைக்கழகத்தினுள் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(III) தேர்தல் அதிகாரி மேற்கண்ட பந்தியின்படி அந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட திகதி, நேரம் மற்றும் இடத்தில் நியமனப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

9. (I) பீடத்தின் இறுதியாண்டுக்காக பதிவுசெய்யப்பட்ட மாணவரைத் தவிர பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு மாணவரும், பீட மாணவர் சங்கத்தின் அலுவலர் அல்லது உறுப்பினர் பதவிக்கான தேர்தலுக்கு வேட்பாளராக பரிந்துரைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்.

(II) ஒரு பீடத்தில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு மாணவரும், அந்த பீட மாணவர் சங்கத்தின் அலுவலராக அல்லது உறுப்பினராவதற்கான தேர்தலுக்கு வேட்பாளராக போட்டியிடுவதற்கு, குறித்த பீடத்தில் பதிவுசெய்யப்பட்ட இரு மாணவர்களால் முன்மொழிபவராகவும், வழிமொழிபவராகவும் கையொப்பமிடப்பட்ட வேட்புமனுவின் மூலம் பெயரிடப்படலாம்.

(III) அவ்வாறான வேட்புமனுப்பத்திரம் முதல் துணை ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள அதே வடிவத்தில் இருக்க வேண்டும் என்பதுடன் அவ் ஆவணத்தில் வேட்பாளர்,

முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர் ஆகியோரின் மாணவர் பதிவு இலக்கம் மற்றும் கையொப்பம் ஆகியவை இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(IV) தேர்தலில் வேட்பாளராக பரிந்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட மாணவரும் தேர்தலில் போட்டியிட சம்மதித்ததற்கான அடையாளமாக வேட்பு மனுவில் கையொப்பம் இடுதல் வேண்டும்.

(V) ஒன்றுக்கும் மேற்பட்ட அலுவலர் அல்லது உறுப்பினர் பதவிகளுக்கு எந்த ஒரு மாணவரும் வேட்பாளராக நியமிக்கப்படலாகாது.

10. (I) பீட மாணவர் சங்கத்தின் அலுவலராகவோ அல்லது உறுப்பினராகவோ போட்டியிடும் வேட்பாளரின் ஒவ்வொரு வேட்புமனுப் பத்திரமும் (அதன் உண்மைப் பிரதியுடன்) பந்தி 8-ல் குறிப்பிட்ட திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றில் மேலே உள்ள பந்தி 7 இன் பிரகாரம் நியமிக்கப்பட்ட தேர்தல் அதிகாரியிடம் வேட்பாளர் அல்லது அவரை முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவர் மூலம் கையளிக்கப்படல் வேண்டும்.

(II) வேட்புமனு பெறப்பட்டவுடன் வேட்புமனு பெறப்பட்ட இடத்தின் வெளியில் வேட்புமனுவின் பிரதியை ஒட்டுவதற்கு தேர்தல் அதிகாரி ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(III) ஒரு வேட்பாளரின் வேட்புமனுப் பத்திரத்திற்கு எதிராக தேர்தல் அதிகாரியிடம் பின்வரும் ஏதேனும் அல்லது அனைத்து விடயங்களிலும் ஆட்சேபனை தெரிவிக்கலாம்.

(அ) பந்தி இன் விதிகளின் கீழ் வேட்பாளரின் தகுதியின்மை.

(ஆ) முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவர் பீடத்தின் பதிவு செய்யப்பட்ட மாணவராக இல்லாமை.

(இ) முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவர் வேட்புமனுப் பத்திரத்தில் தனது கையொப்பத்தை இடாமை.

(ஈ) வேட்பாளர் பீடம் அல்லது பல்கலைக்கழகத்தின் தடை உத்தரவுக்கு உட்பட்டிருப்பமை.

(உ) இந்த துணைவிதிகளின் ஏற்பாடுகளுடன் வேட்புமனுப் பத்திரம் இணங்காமை.

(IV) வேட்பாளரின் வேட்புமனுவைப் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர், அரை மணி நேரத்திற்குள் ஆட்சேபனை தெரிவிக்கப்படாவிட்டால், தேர்தல் அதிகாரியினால் வேட்பாளரின் வேட்புமனு தொடர்பான ஆட்சேபனை ஏற்றுக் கொள்ளலாகாது.

(V) ஒரு வேட்பாளரின் வேட்புமனுப் பத்திரம் மீதான ஒவ்வொரு ஆட்சேபனையும் எதிர்ப்பாளரால் கையெழுத்திடப்பட்ட எழுத்துப்பூர்வ ஆவணமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆட்சேபனைக்கான காரணத்தைக் குறிப்பிட வேண்டும்.

(VI) வேட்பாளரின் வேட்புமனு தொடர்பாக செயற்படுவதற்கு தேவைப்படும் என்று நினைக்கும் எந்தவொரு ஆட்சேபனை தொடர்பாகவும் தேர்தல் அதிகாரி பதிவுசெய்த பின்னர் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியும்.

(VII) தேர்தல் அதிகாரி, ஒரு வேட்பாளரின் வேட்புமனுப் பத்திரம் மீதான ஒவ்வொரு ஆட்சேபனையின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பாக விரைவில் முடிவெடுத்து, வேட்பாளருக்குத் தெரிவித்தல் வேண்டும். அவரது முடிவின்படி ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டால், தேர்தல் அதிகாரியின் முடிவே இறுதியானதாக இருத்தல் வேண்டும்.

11. (I) அலுவலர்கள் தேர்தல் தொடர்பாக, ஒரு குறிப்பிட்ட பதவிக்கான தேர்தலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் முறைப்படி பரிந்துரைக்கப்படவில்லை என்றால், சம்பந்தப்பட்ட பதவிக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் அதிகாரி அறிவித்தல் வேண்டும்.

(II) உறுப்பினர்களின் தேர்தல் தொடர்பாக, பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையை விட அதிகமான வேட்பாளர்களர்கள் முறைப்படி பரிந்துரைக்கப்படவில்லை என்றால், அந்த வேட்பாளர்கள் போட்டியின்றி உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் அதிகாரி அறிவித்தல் வேண்டும்.

(III) பீட மாணவர் சங்கத்தில் உள்ள ஒரு அலுவலர் பதவிக்கு முறையான வேட்புமனுக்கள் ஏதும் பெறப்படாமல் இருந்தாலோ அல்லது பெறப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்பட்டிருந்தாலோ அல்லது உறுப்பினர் தெரிவில் பந்தி 6 (I) இல், குறிப்பிடப்பட்ட அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையில் பெறப்பட்டிருந்தாலோ, தேர்தல் அதிகாரியினால் இவ்விடயம் பிரதான நிறைவேற்று அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு பிரதான நிறைவேற்று அதிகாரியினால் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்வதற்கான புதிய திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை இரண்டாம் அரையாண்டின் பதினோராவது வாரம் முடிவதற்குள் நிர்ணயித்தல் வேண்டும்.

12. அலுவலர் பதவிக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட செல்லுபடியாகும் வேட்புமனுப் பத்திரங்கள் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்கு பந்தி 6(I) இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு அதிகமான வேட்புமனுப் பத்திரங்கள் பெறப்பட்டால், தேர்தல் அதிகாரி வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்ட அலுவலர் மற்றும் உறுப்பினர் பதவிக்கான ஒவ்வொரு வேட்பாளர்களின் பெயர்ப்பட்டியலை தேர்தலுக்காக பல்கலைக்கழகத்திற்குள் வெளியிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

13. (I) பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்தின் அலுவலர்கள் மற்றும் பிற உறுப்பினர்களின் தேர்தலுக்கான திகதி மற்றும் நேரத்தை நிர்ணயிக்க வேண்டும். பீட மாணவர் சங்கத்திற்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தினத்திலிருந்து பதினான்கு (14) வேலை நாட்களுக்குள் திகதி மற்றும் நேரம் இருக்க வேண்டும் என்பதுடன் தவிர்க்க முடியாத அவசர சூழ்நிலையின் காரணமாக பிரதான நிறைவேற்று அதிகாரியினால் வேறுவிதமாக முடிவெடுக்காவிட்டால், பீட மாணவர் சங்க தேர்தல் ஒவ்வொன்றிற்கும் நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் அப்படியே இருத்தல் வேண்டும்

(II) அதனைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்திற்குமான சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பிற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கான திகதி, நேரம் மற்றும் இடம் ஆகியவற்றை பல்கலைக்கழகத்தினுள் வெளியிடுதல் வேண்டும்.

(III) தேர்தல் அதிகாரி இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்தலை நடாத்துதல் வேண்டும். இக்கடமையில் அவருக்கு உதவுவதற்காக எந்த ஒரு நபரையோ அல்லது நபர்களையோ அவர் நியமிக்கலாம்.

(IV) பீட மாணவர் சங்கத்தின் தேர்தலில் போது போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் வாக்களிக்கும் மற்றும் வாக்கெண்ணும் இடங்களில் அவரைப் பிரதிநிதித்துவப்படுத்த இரண்டு மாணவர்களை தேர்தல் பிரதிநிதிகளாக நியமிக்கலாம். வாக்குப்பதிவு தொடங்கும் முன், தேர்தல் பிரதிநிதிகளாக

நியமனம் செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்கள் மற்றும் மாணவர் பதிவு எண்களைக் குறிப்பிட்டு தேர்தல் அதிகாரியிடம் எழுத்துப்பூர்வமாக ஒவ்வொரு நியமனத்தையும் அளிக்க வேண்டும்.

எவ்வாறாயினும், ஒரு வேட்பாளருக்கு ஒரு தேர்தல் பிரதிநிதி மட்டுமே வாக்களிப்பு நிலையத்திலும் வாக்கெண்ணப்படும் நிலையத்திலும் பிரசன்னமாகி இருக்கக்கூடும்.

14. (I) பீட மாணவர் சங்கத் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு பதவிக்குமாக ஒரு வேட்பாளருக்கும் பந்தி 6 இல் காட்டப்பட்டுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கைக்குச் சமமான உறுப்பினர்களுக்கும் வாக்களிக்க தகுதியுள்ள ஒவ்வொரு மாணவரும் உரிமையுடையவர்கள் ஆவர்.
(இருப்பினும், அத்தகைய மாணவர் அந்த உரிமையை அதிகபட்சமாக பயன்படுத்துதல் கூடாது.)

(II) ஒவ்வொரு பதவிக்கும் அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் அதிகாரி அறிவித்தல் வேண்டும்.

(III) அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளர்கள் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக தேர்தல் அதிகாரி அறிவிக்க வேண்டும். (அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட வேண்டும், அடுத்த அதிக வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் அடுத்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படல் வேண்டும்.)

எவ்வாறாயினும், பந்தி 6 இன் கீழ் காட்டப்பட்டுள்ளபடி, உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, அந்த பீட மாணவர் சங்கத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருக்க வேண்டும்.

(IV) ஒரு அலுவலர் அல்லது மற்ற உறுப்பினருக்கான தேர்தலில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் சமமாகக் காணப்படும் போது மேலதிகமாக ஒரு வாக்கு அதிகரித்தால் அவ்வேட்பாளர் அலுவலராகவோ அல்லது உறுப்பினராகவோ நியமிக்கப்பட முடியும் என்ற நிலைமை காணப்பட்டால் எந்த வேட்பாளருக்கு அந்த மேலதிக வாக்கினை வழங்குவது என்பதனை குலுக்கல் சீட்டு முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(V) யாராவது ஒரு வேட்பாளர் எந்த வாக்குகளையும் பெறவில்லை என்றால், இந்தத் தேர்தலில் அவர் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை பூச்சியமாக கணக்கிடப்பட வேண்டும்.

15. (I) பீட மாணவர் சங்கத்தின் ஒவ்வொரு அலுவலரும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வியாண்டின் இறுதியில் பதவி வகிப்பதை நிறுத்துதல் வேண்டும்.

(II) எந்த மாணவரும் ஒரு கல்வியாண்டுக்கு மேல் ஒரே அலுவலர் பதவியில் இருத்தல் ஆகாது.

(III) எந்த அலுவலரோ அல்லது உறுப்பினரோ
(அ) மாணவநிலைமை நிறுத்தப்பட்டால் அல்லது
(ஆ) சிரேஷ்ட பொருளாளருக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிப்பதன் மூலம் தனது பதவி அல்லது உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தால், அல்லது
(இ) பல்கலைக்கழகத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலோ அல்லது நீக்கப்பட்டாலோ, அவரது அலுவலர் பதவி அல்லது உறுப்பினர் பதவி கைவிடப்பட்டதாகக் கருதப்படும்.

(IV) ஒரு பீட மாணவர் சங்கத்தில் ஒரு அலுவலர் பதவி அல்லது உறுப்பினர் பதவி வெற்றிடமாகும் போது,அந்த பீடத்தின் மாணவர்கள் அந்த வெற்றிடத்தை விரைவில் நிரப்ப பொருத்தமான நபரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் தனது முன்னோடியின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு அலுவலராக அல்லது உறுப்பினராக இருக்க தகுதியுடையவர்.

(V) பிரதான நிறைவேற்று அதிகாரி, இயன்றவரை, வேட்புமனுக்கள் மற்றும் தேர்தல்கள் தொடர்பான இத் துணைவிதிகளில் மேற்கூறிய விதிகளுக்கு இணங்கி, அத்தகைய தேர்தலை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(VI) அப்படியிருந்தும், இத்துணைவிதியின் 6(I) ஆம் பந்தியின்படி குறிப்பிட்ட ஒரு பீடத்தில் ஒரு குறிப்பிட்ட கல்வியாண்டிற்கான மாணவர் ஒன்றியம் நிறுவப்படாத பட்சத்தில், குறித்த கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் குறித்த பீட மாணவர் சங்கத்தை நிறுவுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது.

16. (I) பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

(அ) பீட மாணவர் சங்கத்தின் அனைத்து கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல்.

(ஆ) பீட மாணவர் சங்கத்தின் முடிவுகளை செயற்படுத்துதல்.

(இ) பீட மாணவர் சங்கத்தின் கூட்டத்தை கூட்டுதல்.

(II) பீட மாணவர் ஒன்றியத்தின் துணைத் தலைவரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

(அ) தலைவர் இல்லாத நிலையில் பீட மாணவர் சங்கத்தின் எந்தவொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குவது.

(ஆ) தலைவரின் கடமைகளை நிறைவேற்றுவதில் அவருக்கு உதவுதல்.

(இ) பீட மாணவர் சங்கத்தால் ஒதுக்கப்பட்ட வேறு ஏதேனும் கடமை அல்லது பணியைச் செய்தல்

(III) பீட மாணவர் ஒன்றியத்தின் செயலாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

(அ) பீட மாணவர் சங்கத்தின் அனைத்து விடயங்களின் பதிவுகளையும் வைத்திருப்பது.

(ஆ) தலைவரின் வழிகாட்டுதலின்படி அல்லது பீட மாணவர் சங்கத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் செயலாளரிடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையைப் பெற்றவுடன் பீட மாணவர் சங்கத்தின் கூட்டங்களை அழைத்தல்.

(இ) பீடத்தின் எந்த ஒரு மாணவருக்கும் கூட்டங்களின் அறிக்கைகள் கிடைக்கின்றன என்பதனை உறுதி செய்தல்.

(IV) பீட மாணவர் ஒன்றியத்தின் கனிஷ்ட பொருளாளரின் செயல்பாடுகள் மற்றும் கடமைகள் பின்வருமாறு.

(அ) பீட மாணவர் சங்கத்தின் நிதியை தனது பொறுப்பில் வைத்திருத்தல்.

(ஆ) மேற்கூறிய கணக்கை பராமரிப்பது தொடர்பான விதிமுறைகளுக்கு உட்பட்டு, அனைத்து வருமானம் மற்றும் செலவுகள் அந்த நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் கணக்குகளில் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்தல்.

(இ) பீட மாணவர் சங்கத்தால் ஏதேனும் தொகையைப் பெற்றால் பெற்ற ஒரு வாரத்திற்குள் சிரேஷ்ட பொருளாளருக்கு அறிவித்தல்.

(ஈ) சிரேஷ்ட பொருளாளரின் அனுமதியுடன் பீட மாணவர் சங்கத்தின் நிதியிலிருந்து பணம் செலுத்துதல்.

(உ) பீட மாணவர் சங்கத்தின் அலுவலர்களுடன் கலந்தாலோசித்த பின்னர், அதன் அலுவலர்களைத் தேர்ந்தெடுத்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கல்வியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.

(ஊ) தேவையான நேரத்தில் கூடுதல் மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

(எ) ஒவ்வொரு தவணையின் நிதி நிலை குறித்த அறிக்கையை அந்த காலத்தின் ஒரு மாதத்திற்குள் பீட மாணவர் சங்கத்திற்கு சமர்ப்பித்தல்.

(ஏ) பீட மாணவர் சங்கம் தெரிவுசெய்யப்பட்டு கல்வியாண்டு முடிவடைவதற்கு இரண்டு வாரங்களிற்குள் பீட மாணவர் சங்கத்தின் குறித்த கல்வியாண்டிற்கான வருமான மற்றும் செலவின அறிக்கையை மற்றும் ஐந்தொகை ஆகியவற்றினை பிரதான நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு அலுவலரிடம் சிரேஷ்ட பொருளாளர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(V) பீட மாணவர் ஒன்றியத்தின் சிரேஷ்ட பொருளாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

(அ) பீட மாணவர் சங்கத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளைச் சரிபார்த்து, தேவையான பரிந்துரைகளைச் செயதல்.

(ஆ) பீட மாணவர் சங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களின் சரியான மேற்பார்வை மற்றும் வெளிப்படைத்தன்மையை சரிபார்த்தல்.

(இ) கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளை முன்கூட்டியே ஆய்வு செய்து பொருத்தமான பரிந்துரைகளை வழங்குதல்.

(ஈ) கணக்காய்வுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு வழங்குதல்.

17. (I) பிரதான நிறைவேற்று அதிகாரியினால் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் முதலாவது கூட்டத்தினை நடாத்துவதற்கான திகதி நிர்ணயிக்கப்படுவதுடன் அதன் போது அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். இத்திகதியானது இத்துணைவிதியின் 4 வது பந்தியின் பிரகாரம் நடைபெற்ற பீட மாணவர் சங்கத்தின் அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்தல் நடைபெற்று இரண்டு வாரங்களுக்குள் ஒரு நாளாக இருக்க வேண்டும்.

(II) இந்தக் கூட்டத்தின் நோக்கங்களுக்காக, பிரதான நிறைவேற்று அதிகாரி, இரகசிய வாக்கெடுப்பு மூலம் அலுவலர்களின் தேர்தலை நடாத்துவதற்கு, பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை தேர்தல் அதிகாரியாக நியமித்தல் வேண்டும். அவர் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதுடன் நேர்மையைப் பேணுவதற்கும் அலுவலகத் தேர்தல்களை முறையாக நடாத்துவதற்கும் தேவையான அனைத்தையும் செய்வார்.

(III) அலுவலர்களின் தேர்தலின் முடிவில், பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட பொருளாளராக பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்படுவதற்காக பல்கலைக்கழக மாணவர் சங்கம் பல்கலைக்கழக சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரின் பெயரினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(IV) தேர்தல் அதிகாரி மேற்குறித்த தேர்தல் குறித்த அறிக்கையை பிரதான நிறைவேற்று அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

18. (I) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் ஒவ்வொரு அலுவலரினதும் பதவிக் காலம் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வியாண்டின் இறுதியில் முடிவடையும்.

(II) எந்த உறுப்பினரும் ஒரு கல்வியாண்டுக்கு மேல் ஒரே பதவி வகித்தல் ஆகாது.

(III) அலுவலர் அல்லது உறுப்பினர்

(அ) பீட மாணவர் சங்கத்தின் அலுவலர் அல்லது உறுப்பினர் பதவியை நிறைவுறுத்துகிறார் எனின் அல்லது

(ஆ) சிரேஷ்ட பொருளாளருக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிப்பின் மூலம் பதவியை ராஜினாமா செய்தார் எனின் அல்லது

அவரது பதவி அல்லது உறுப்பினர் பதவியை துறந்ததாகக் கருதப்படும்.

(IV) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் பதவியொன்று வெற்றிடமாகும்போது, அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் உறுப்பினர்களில் இருந்து பொருத்தமான ஒருவரை விரைவில் நியமிக்க வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் தனது முன்னோடியின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு பதவியில் இருக்க உரிமையுண்டு.

எவ்வாறாயினும், பந்தி 15 (III) இன் கீழ், பீட மாணவர் சங்கத்தில் உள்ள வெற்றிடத்தால் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தில் ஒரு பதவி வெற்றிடமாக இருந்தால், பீட மாணவர் சங்கத்தின் வெற்றிடம் நிரப்பப்பட்டதன் பின்னர் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தில் உள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்கான தேர்தல் நடாத்தப்படல் வேண்டும்.

19. (I) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவரின் செயற்பாடுகள் மற்றும் கடமைகள் பின்வருமாறு.

(அ) சங்கத்தின் அனைத்து கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல்.

(ஆ) சங்கத்தின் முடிவை செயல்படுத்துதல் மற்றும்

(இ) சங்கத்தின் கூட்டங்களை கூட்டுதல்.

(II) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் துணைத் தலைவரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

(அ) தலைவர் இல்லாத நிலையில் சங்கத்தின் எந்தக் கூட்டத்திற்கும் தலைமை தாங்குவது.

(ஆ) தலைவருக்கு அவரது செயற்பாடுகளை நிறைவேற்ற உதவுதல் மற்றும்

(இ) சங்கத்தால் அவருக்கு ஒதுக்கப்பட்ட வேறு ஏதேனும் பணிகள் அல்லது கடமைகளைச் செய்தல்.

(III) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் செயலாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

(அ) சங்கத்தின் அனைத்து விடயங்களின் பதிவுகளையும் வைத்திருப்பது.

(ஆ) தலைவரின் வழிகாட்டுதலின்படி அல்லது சங்கத்தின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் செயலாளரிடம் எழுத்துப்பூர்வ கோரிக்கையைப் பெற்றவுடன் சங்கத்தின் கூட்டங்களை அழைத்தல்.

(இ) பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட எந்த ஒரு மாணவருக்கும் கூட்டங்களின் அறிக்கைகள் கிடைக்கின்றன என்பதனை உறுதி செய்தல்.

(IV) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் கனிஷ்ட பொருளாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

(அ) சங்கத்தின் நிதியை தனது பராமரிப்பில் வைத்திருப்பது.

(ஆ) மேற்கூறிய கணக்கை பராமரிப்பது தொடர்பான விதிமுறைகளுக்கு உட்பட்டு, அனைத்து வருமானம் மற்றும் செலவுகள் அந்த நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் கணக்குகளில் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்தல்.

(இ) சங்கத்திற்கு ஏதேனும் நிதி கிடைத்தால் அது தொடர்பாக ஒரு வாரத்திற்குள் சிரேஸ்ட பொருளாளருக்கு தெரியப்படுத்தல்.

(ஈ) சிரேஷ்ட பொருளாளரின் அனுமதியுடன் மாணவர் சங்கத்தின் நிதியிலிருந்து பணம் செலுத்துதல்.

(உ) அலுவலர்களைத் தேர்ந்தெடுத்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து சங்கத்திடம் சமர்ப்பித்தல். (இதற்கென அலுவலர்கள் மற்றும் சங்கத்தின் நிலைக்குழு இருந்தால், அவர்களுடன் விவாதிக்கலாம்.)

(ஊ) தேவைப்பட்டால் கூடுதல் மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

(எ) சங்கம் மற்றும் அதன் சிரேஷ்ட பொருளாளரிடம் ஒவ்வொரு மாத இறுதியிலும் சங்கத்தின் நிதிநிலைமை பற்றிய சுருக்கமான அறிக்கையை சமர்ப்பித்தல்.

(ஏ) சங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வியாண்டு முடிவதற்கு இரண்டு வாரங்களுக்குள் கல்வியாண்டிற்கான சங்கத்தின் வருமானம் மற்றும் செலவு குறித்த அறிக்கையை பிரதான நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வு அதிகாரியிடம் சிரேஷ்ட பொருளாளர் ஊடாக சமர்ப்பித்தல்.

(V) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட பொருளாளரின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருமாறு.

(அ) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளைச் சரிபார்த்து, தேவையான பரிந்துரைகளைச் செய்தல்.

(ஆ) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களின் சரியான மேற்பார்வை மற்றும் வெளிப்படைத்தன்மையை சரிபார்த்தல்.

(இ) கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகளை முன்கூட்டியே ஆய்வு செய்து பொருத்தமான பரிந்துரைகளை வழங்குதல்.

(ஈ) கணக்காய்வுக்கு முன்னர் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு வழங்குதல்.

20. (I) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் பொறுப்புகள்

(அ) பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களின் மாணவர்களின் நலன் சார்ந்த விவகாரங்களைக் கவனித்து, பிரதான மாணவர் ஆலோசகர் / பணிப்பாளர், மாணவர் விவகாரங்கள் / பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகியோருக்கு எழுத்துப்பூர்வமாக அறிக்கை அளிக்க வேண்டும்.

(ஆ) மேலும், பல்கலைக்கழகத்தில் கற்கைகளை மேற்கொள்வதில் தடைகள் அல்லது சிரமங்கள் இருந்தால், அவற்றை பிரதான மாணவர் ஆலோசகர் / பணிப்பாளர், மாணவர் விவகாரங்கள் / பிரதான நிறைவேற்று அதிகாரி ஆகியோருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

(இ) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தால் பெறப்படும் நிதிகள் (பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது வேறு வழிகளில் இருந்து பெறப்பட்டவை) வெளிப்படையாகவும் முறையாகவும் கணக்குகளை வைத்து மாணவர்களின் நலனுக்காக முறையாக நிர்வகிக்கப்பட்டு, தற்போதுள்ள விதிகள் மற்றும் விதிமுறைகளின்படி பதிவுகளை வைத்திருத்தல் வேண்டும்.

(ஈ) பல்கலைக்கழக அல்லது ஆசிரியப் பணியாளர்கள் அல்லது நிர்வாக அலுவலர்கள் அல்லது கல்வி உதவியாளர் அல்லது கல்விசாரா ஊழியர்கள் சமூகத்தின் நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடாதிருத்தல் வேண்டும்.

(உ) பிரதான நிறைவேற்று அதிகாரி அல்லது பிரதி பிரதான நிறைவேற்று அதிகாரி அல்லது மாணவர் விவகார பணிப்பாளர் அல்லது பீடாதிபதி அல்லது பிரதான மாணவர் ஆலோசகர் வழங்கிய அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகளுக்கு இணங்க ஒழுகுதல் வேண்டும்.

(ஊ) இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் நிதி விவகாரங்கள் பந்தி 21 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேற்கொள்ளப்படும்.

(எ) 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் பிற துன்புறுத்தல்கள் தடைச்சட்டம் தொடர்பான சம்பவங்கள் பல்கலைக்கழகத்தினுள் நடைபெற்றால் பிரதான நிறைவேற்று அதிகாரியிடம் அல்லது பிரதி பிரதான நிறைவேற்று அதிகாரியிடம் அல்லது மாணவர் விவகார பணிப்பாளரிடம் தெரியப்படுத்துவதுடன் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(II) பீட மாணவர் சங்கத்தின் பொறுப்புகள்

(அ) சம்பந்தப்பட்ட பீட மாணவர் நலன் சார்ந்த விவகாரங்கள் விசாரிக்கப்பட்டு, எழுத்துப்பூர்வமாக பீடாதிபதியிடம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

(ஆ) மேலும், பீடத்தில் படிப்பை மேற்கொள்வதில் தடைகள் அல்லது சிரமங்கள் இருந்தால், அவற்றை பீடாதிபதிக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க வேண்டும்.

(இ) பீட மாணவர் சங்கத்தால் பெறப்படும் நிதியானது தற்போதுள்ள விதிகளின்படி வெளிப்படையாகவும் முறையாகவும் கணக்குகளில் வைக்கப்பட வேண்டும் மற்றும் பதிவுகள் நல்ல நிர்வாகத்துடனும் மாணவர்களின் நலனுக்காகவும் செலவிடப்படல் வேண்டும்.

(ஈ) பீடம் அல்லது பல்கலைக்கழகம் அல்லது ஆசிரிய பணியாளர்கள் அல்லது நிர்வாக அலுவலர்கள் அல்லது கல்வி உதவியாளர் அல்லது கல்விசாரா ஊழியர்கள் சமூகத்தின் நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளல் ஆகாது.

(உ) மாணவர் விவகார பணிப்பாளர் அல்லது பீடாதிபதி அல்லது பிரதான மாணவர் ஆலோசகர் வழங்கிய அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகளுக்கு இணங்க ஒழுகுதல் வேண்டும்.

(ஊ) இதற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் நிதி விவகாரங்கள் பந்தி 21 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேற்கொள்ளப்படும்.

(எ) 1998 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதை மற்றும் பிற துன்புறுத்தல்கள் தடைச்சட்டம் தொடர்பான சம்பவங்கள் பீடத்தினுள் நடைபெற்றால் பீடாதிபதியிடம் அல்லது மாணவர் விவகார பணிப்பாளரிடம் தெரியப்படுத்துவதுடன் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

21. பல்கலைக்கழக மாணவர் சங்கம் மற்றும் பீட மாணவர் சங்கங்களின் செயற்பாடு மற்றும் நிதி விவகாரங்கள்

(I) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட பொருளாளர் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட கல்விப் பணியாளர் உறுப்பினராக (சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II பதவிக்கு மேல்) இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர் பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்படுவார்.

(II) பீட மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட பொருளாளர் சம்பந்தப்பட்ட பீடத்தின் சிரேஷ்ட கல்விப் பணியாளர் உறுப்பினராக (சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II பதவிக்கு மேல்) இருக்க வேண்டும் என்பதுடன் இவர் பீட மாணவர் சங்கத்தின் அலுவலர் குழு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்டு, பிரதான நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்படுவார்.

(III) ஒவ்வொரு மாணவர் சங்கமும் நிறுவப்பட்ட பின்னர், சங்கத்தின் முதலாவது கூட்டம் ஒரு வாரத்திற்குள் நடாத்தப்படல் வேண்டும்.

(IV) சங்கங்களால் பெறப்பட்ட அனைத்து நிதிகளும் (பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மானியம் மற்றும் பிற வழிகளில் பெறப்படும் / பெறப்பட்ட நிதி) அந்தந்த மாணவர் சங்கத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் வரவு

வைக்கப்பட வேண்டும் மற்றும் சங்கத்தின் சார்பாக அனைத்து கொடுப்பனவுகளும் குறித்த வங்கிக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(V) மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட பொருளாளரால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின்றி அல்லது பாதீட்டில் குறிப்பிடப்படாமல் மாணவர் சங்கக் கணக்கிலிருந்து பணம் செலுத்த முடியாது.

(VI) விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் சிரேஷ்ட பொருளாளரின் ஒப்புதலுக்கு உட்பட்டு பணம் செலுத்தலாம் என்பதுடன் அக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டத்தில் இளம்பொருளாளரினால் அறிக்கையிடப்பட்டு முறையான வகையில் கணக்கீட்டுக்கு உட்படுத்துதல் வேண்டும்.

(VII) ஒவ்வொரு மாணவர் சங்கத்தின் கணக்குப் புத்தகங்கள் அனைத்தும் சிரேஷ்ட பொருளாளர் அல்லது சம்பந்தப்பட்ட பீட மாணவர்களின் கோரிக்கையின் பேரில் பரிசீலனை செய்வதற்காக வழங்கப்படல் வேண்டும்.

(VIII) ஒவ்வொரு மாணவர் சங்கமும் அனைத்து நிதி திரட்டும் நடவடிக்கைகள் உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் குறைந்தபட்சம் ஒரு வாரத்திற்கு முன்னதாக மாணவர் சேவைகள் பிரிவு மூலம் பல்கலைக்கழகத்திடம் இருந்து முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

**(IX) பல்கலைக்கழக மாணவர் சங்கம் மற்றும் ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்தின் கணக்குகள், கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் சம்பந்தப்பட்ட கல்வியாண்டில் கணக்காய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும்.**

**(X) அதன்பிரகாரம், பல்கலைக்கழக மாணவர் சங்கம் மற்றும் பீட மாணவர் சங்கம் ஆகியவற்றின் தலைவர், செயலாளர் மற்றும் இளம் பொருளாளர் ஆகியோரினால் அவர்களின் பதவிக்காலம் முடிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் தங்கள் மாணவர் சங்கங்களின் கணக்குகளைத் கணக்காய்வு செய்து, சிரேஷ்ட பொருளாளரின் உறுதிப்படுத்தலுடன் பிரதான நிறைவேற்று அதிகாரியின் அனுமதிக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.**

**(XI) கணக்குகளை கணக்காய்வு செய்து பிரதான நிறைவேற்று அதிகாரியின் உரிய அனுமதியைப் பெறாத பல்கலைக்கழக மாணவர் சங்கம் அல்லது ஒவ்வொரு பீட மாணவர் சங்கம் அடுத்துவரும் ஆண்டு நிறுவப்படமாட்டாது.**

**(XII) கணக்காய்வுக்குப் பின்னர் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் அல்லது பீட மாணவர் சங்கத்தின் நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்படின் அந்தந்த மாணவர் சங்கத்தின் அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடாத்தப்பட்டு மூதவையின் பரிந்துரையின் பேரில் பேரவையின் அனுமதியுடன் தண்டனை வழங்கப்படும்.**

**(XIII) பல்கலைக்கழக மாணவர் சங்கம் மற்றும் பீட மாணவர் சங்கங்களின் கணக்குகள் மற்றும் நிதிநிலை அறிக்கைகள் களனி பல்கலைக்கழகத்தின் பிரதி உள்ளக கணக்காய்வாளர் அல்லது சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் அல்லது உதவி உள்ளக கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.**

22. பல்கலைக்கழக மாணவர் சங்கம் அல்லது பீட மாணவர் சங்கங்களின் அலுவலர் குழு, பல்கலைக்கழக மாணவர் சங்கம் அல்லது பீட மாணவர் சங்கங்களை நிறுவுவதன் நோக்கங்களுக்குப் புறம்பாகச் செயற்படுவது அல்லது பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்குச் சேதம் விளைவிக்கும் வகையில் செயற்படுதல் அல்லது நிறைவேற்று அதிகாரி, பீடாதிபதி மற்றும் நிறைவேற்று அதிகாரியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரால் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் /

உத்தரவுகள் ஏற்றுக் கொள்ளாமை அல்லது ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்களிடம் அவமரியாதையாக நடந்து கொள்ளல், துன்புறுத்துவது அல்லது துன்புறுத்துவது போன்ற செயற்பாடுகள் போன்றவற்றில் ஈடுபட்டால் நிறைவேற்று அதிகாரியினால் சம்பந்தப்பட்ட மாணவர் சங்கம் அதன் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் இரத்துச் செய்யப்படல் வேண்டும்.

23. இந்த துணைவிதிகளின் விளக்கம் தொடர்பான ஏதாவது வினா ஏற்படின் அவை பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன பேரவையின் முடிவே இறுதி முடிவானதாக இருத்தல் வேண்டும்.

24. இந்த துணைவிதிகளில்,

மூதவை வேறுவிதமாக முடிவு செய்யாவிட்டால், கல்வியாண்டு என்பது ஒரு வருடத்தின் அக்டோபர் 01 அன்று தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 அன்று முடிவடையும் காலத்தை குறிக்கிறது.

"சட்டம்" என்பது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டம்

"கணக்காய்வு அதிகாரி" என்பது பல்கலைக்கழக மாணவர் சங்கம் அல்லது பீட மாணவர் சங்கத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்காக பிரதான நிறைவேற்று அதிகாரியால் நியமிக்கப்பட்ட எந்தவொரு கணக்காய்வு அதிகாரியும் ஆகும்.

"பேரவை" என்பது களனிப் பல்கலைக்கழகத்தின் பேரவை என்று பொருள்படும்.

"பீடாதிபதி" என்பது ஒவ்வொரு பீடத்தின் பீடாதிபதி அல்லது பீடாதிபதிக்குப் பதிலாக தற்காலிகமாக செயல்படும் நபர்.

"பீடம்" என்பது சட்டத்தின் கீழ் களனிப் பல்கலைக்கழகத்தால் நிறுவப்பட்ட எந்தவொரு பீடத்தையும் குறிக்கும்.

"பிரதான நிறைவேற்று அதிகாரி" என்பது துணைவேந்தர் அல்லது தற்காலிகமாக துணைவேந்தரின் பணிகளைச் செய்யும் பிற நபர் என்று பொருள்படும்.

"பதிவாளர்" என்பது களனிப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அல்லது பதிவாளருக்குப் பதிலாக தற்காலிகமாகச் செயல்படும் நபர்.

"மூதவை" என்பது களனி பல்கலைக்கழகத்தின் மூதவை.

"மாணவர்" என்பது களனிப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப்பட்டப் படிப்புக்கு செல்லுபடியாகும் வகையில் பதிவுசெய்யப்பட்ட "மாணவன்" அல்லது "மாணவி" என்று பொருள்படும்.

"பிரதான மாணவர் ஆலோசகர்" என்பது களனிப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அல்லது பேரவையினால் நியமிக்கப்பட்ட ஆசிரிய உறுப்பினர் என்று பொருள்படும்.

"மாணவர் விவகாரப் பணிப்பாளர்" என்பது களனிப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அல்லது பேரவையினால் நியமிக்கப்பட்ட ஆசிரிய உறுப்பினர் என்று பொருள்படும்.

"பிரதி பிரதான நிறைவேற்று அதிகாரி" என்பது களனி பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நியமிக்கப்பட்ட பிரதித் துணைவேந்தர் என்று பொருள்படும்.

## 9 வது பந்தி
## முதலாவது துணை ஆவணம்
## மாதிரி வேட்பாளர் நியமனப் பத்திரம்

தேர்தல் அதிகாரி அவர்கட்கு,

...............................................................

தேர்தல் குழு - பீடம்

**நியமனப் பத்திரம்**

முன்மொழிபவர் மற்றும் வழிமொழிபவர்களாகிய நாம்

..............................................................................................................................................................................

வேட்பாளரின் பெயர்

..............................................................................................................................................................................

பீட மாணவர் சங்கத்தின் பெயர்

பதவியைக் குறிப்பிடவும். உதாரணம் : தலைவர், செயலாளர் அல்லது உறுப்பினர்

ஆக தெரிவு செய்யப்படுவதற்கு வேட்பாளராக பெயரிடுகின்றோம்.

(அ) வேட்பாளர் மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல் குழுவின் தகுதியைப் பெற்ற மாணவர் எனவும்

(ஆ) தேர்தலில் போட்டியிடுவதற்கான அவரது உடன்பாட்டினை தெரிவிக்கும் பொருட்டு இந்நியமனப் பத்திரத்தில் அவர் கையொப்பமிட்டுள்ளார் என நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

வேட்பாளரின் முழுப் பெயர் : -

வேட்பாளரின் மாணவர் பதிவு இலக்கம் : -

வேட்பாளரின் கையொப்பம் : -

முன்மொழிபவரின் முழுப் பெயர் : -

முன்மொழிபவரின் மாணவர் பதிவு இலக்கம் : -

..................................................................

முன்மொழிபவரின் கையொப்பம்

வழிமொழிபவரின் முழுப் பெயர் : -

வழிமொழிபவரின் மாணவர் பதிவு இலக்கம் : -

..................................................................

வழிமொழிபவரின் கையொப்பம்

**இரண்டாவது துணை ஆவணம்**
**மாதிரி வாக்குச்சீட்டு**

| | | |
|---|---|---|
| | தலைவர் | |
| | | |
| தொடரிலக்கம் **குறிப்பு: வாக்குச் சீட்டின் பின்பகுதியில் உள்ள எண்ணுடன் தொடர்புடைய எண்ணை பிரதியில் வைத்திருக்க வேண்டும்.** | உபதலைவர் | |
| | | |
| | செயலாளர் | |
| | | |
| | பத்திராதிபர் | |
| | | |
| | இளம்பொருளாளர் | |
| | | |
| | உறுப்பினர்கள் | |
| * **வேட்பாளர்களின் பெயர்களைக் குறிப்பிடுக** | | |
| | | |

# 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மாணவர் சங்க விதிகள்

பின்னர் திருத்தப்பட்டதன் பிரகாரம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 137 ஆம் பிரிவு மற்றும் பந்திகள் 4 (2) மற்றும் 5 ன் கீழ் களனிப் பல்கலைக்கழகத்தின் பேரவையினால் உருவாக்கப்பட்ட விதிகள்.

1. இந்த விதிகள் 2023 ஆம் ஆண்டின் 01 இலக்க மாணவர் சங்க விதிகள் என அறியப்படும்.

2. (I) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் கூட்டமானது பருவத்தில் ஒருமுறையாவது நடாத்தப்படுதல் வேண்டும்.

(II) தலைவரின் அறிவுறுத்தலின்படி அல்லது மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கால் கோரப்பட்டால், பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் கூட்டம் செயலாளரால் கூட்டப்படுதல் வேண்டும்.

(III) ஒவ்வொரு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலையும் தலைவருடன் கலந்தாலோசித்து செயலாளரால் தயாரிக்கப்பட்டு சங்க உறுப்பினர்களிடையே விநியோகிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு கூட்டம் தொடர்பாகவும் மூன்று நாட்களுக்கு முன்னர் கீழ்நிலை உறுப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்படல் வேண்டும்.

(IV) பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் கூட்டத்திற்கான கோரம் அதன் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காக இருக்க வேண்டும். (மூன்றில் ஒரு பங்கு முழு எண் மற்றும் பின்ன எண் எனில், அடுத்த முழு எண் கோரமாக கருதப்படுகிறது.)

(V) தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் இல்லாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ ஒரு பல்கலைக்கழக கூட்டத்திற்கு தலைமை தாங்க முடியாவிட்டால், அங்கிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு தங்களுக்குள் இருந்து ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(VI) தலைவர் கூட்டத்தை பொருத்தமாகவும் சரியானதாகவும் நடத்த வேண்டியதுடன் முடிவுகள் ஏகமனதாக அல்லது பெரும்பான்மை வாக்குகளால் கைகளை உயர்த்தி அல்லது இரகசிய வாக்கெடுப்பு மூலம் எடுக்கப்படுதல் வேண்டும்.

(VII) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் கூட்டத்தில் தலைவர் அல்லது துணைத் தலைவர் அல்லது வேறு எந்த உறுப்பினரும் முதன்மையான வாக்கினைக் கொண்டிருப்பதுடன் வாக்களிப்பில் சம வாக்குகள் இருந்தால், இதற்கு மேலதிகமாக தீர்மானமிக்க வாக்கினை வழங்குதல் வேண்டும்.

(VIII) செயலாளர் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் அனைத்து விவகாரங்களின் பதிவுகளையும் வைத்திருத்தல் வேண்டும் மற்றும் ஒரு கூட்டத்தின் நடவடிக்கைகளின் கூட்ட அறிக்கை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சங்கத்தின் உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

3. (I) பல்கலைக்கழக மாணவர் சங்கம் அதன் விவகாரங்களைக் கட்டுப்படுத்துவதுடன் இந்த விதிகளில் வேறுவிதமாக வழங்கப்படாவிட்டால் அதன் செயல்பாடுகளை எந்தவொரு நபருக்கும் அல்லது அமைப்பிற்கும் வழங்கப்படலாகாது.

(II) பல்கலைக்கழக மாணவர் சங்கம், ஒன்றியத்தின் விவகாரங்களை முறையாக நிர்வகிப்பதற்காக அதன் அலுவலர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு ஒரு வாரத்திற்குள் நிலைக்குழுக்களை நியமிக்கலாம்.

(III) (அ) ஒவ்வொரு நிலைக்குழுவும் ஐந்து உறுப்பினர்களுக்கு குறையாத மற்றும் பத்து உறுப்பினர்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிலைக்குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், முடிந்தவரை, பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் பீடங்களின் தேர்வை பிரதிபலிக்க வேண்டும்.

(IV) மாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் பணிகள் சம்பந்தப்பட்ட எந்தவொரு விஷயத்தையும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க பல்கலைக்கழக மாணவர் சங்கத்திற்கு ஒரு சிறப்புக் குழு நியமிக்கப்படலாம்.

4. (I) பல்கலைக்கழக மாணவர் சங்க நிதி (இதற்கப்பால் பல்கலைக்கழக மாணவர் சங்க நிதி என குறிப்பிடப்படுகிறது) சங்கத்தின் பொது நிதி விவகாரங்களுக்காக நிறுவப்படுதல் வேண்டும்.

(II) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தால் பெறப்படும் அனைத்துப் பணமும் பல்கலைக்கழக மாணவர் சங்க நிதியில் வரவு வைக்கப்படும் மற்றும் சங்கத்தின் சார்பாகச் செய்யப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளும் பல்கலைக்கழக மாணவர் சங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(III) பல்கலைக்கழக மாணவர் சங்க நிதியத்தால் பெறப்படும் அனைத்துப் பணமும் சங்கத்தின் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும். கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கு இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியில் வைப்பீடு செய்யப்படல் வேண்டும்.

(IV) மேற்கூறிய பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட ஒவ்வொரு காசோலையும் பிரதான நிர்வாக அதிகாரியினால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பொருளாளரால் கையொப்பமிடப்படல் வேண்டும். சிரேஷ்ட பொருளாளர் தவிர, தலைவர் அல்லது இளம்பொருளாளர் அவரது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

(V) வரவு செலவுத் திட்ட ஆவணம் அல்லது கூடுதல் மதிப்பீட்டில் அத்தகைய பணம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, சிரேஷ்ட பொருளாளரால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, பல்கலைக்கழக மாணவர் சங்க நிதியிலிருந்து பணம் செலுத்தப்படலாகாது.

ஒரு சிறப்பு தேவைகளின் போது, சிரேஷ்ட பொருளாளரின் அதிகாரத்துடன் பணம் செலுத்தலாம் மற்றும் இளைம் பொருளாளர் அவ்வாறு செலுத்திய பிறகு நடைபெறும் முதல் கூட்டத்தில் சங்கத்திற்கு அந்த கொடுப்பனவு தொடர்பாக அறிக்கையிடல் வேண்டும்.

(VI) சங்கத்தின் கணக்குப் புத்தகங்கள், சிரேஷ்ட பொருளாளர் அல்லது பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு மாணவராலும் பரிசீலனைக்கு உட்படுத்துவதற்காக இளம் பொருளாளரால் வழங்கப்படுதல் வேண்டும்.

5. (I) பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்ய பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் ஒரு கணக்காய்வாளர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(II) இளம் பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வியாண்டு முடிவதற்கு இரண்டு வாரங்களுக்குள் கல்வியாண்டிற்கான சங்கத்தின் வருமானம் மற்றும் செலவு அறிக்கை மற்றும் ஐந்தொகை அறிக்கையை சிரேஷ்ட பொருளாளர் ஊடாக கணக்காய்வாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(III) கணக்காய்வாளர் சிரேஷ்ட பொருளாளரிடமிருந்து வருமானம் மற்றும் செலவு அறிக்கை மற்றும் ஐந்தொகை அறிக்கையைப் பெற்ற ஒரு மாதத்திற்குள் பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியிடம் அது குறித்த தனது அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

6. (I) பீட மாணவர் சங்கத்தின் கூட்டமானது, பருவத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு முறையாவது நடாத்தப்படல் வேண்டும்.

(II) தலைவரின் அறிவுறுத்தலின்படி அல்லது மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கால் கோரப்பட்டால், பீட மாணவர் சங்கத்தின் கூட்டம் செயலாளரால் கூட்டப்படுதல் வேண்டும்.

(III) ஒவ்வொரு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலையும் தலைவருடன் கலந்தாலோசித்து செயலாளரால் தயாரிக்கப்பட்டு சங்க உறுப்பினர்களிடையே விநியோகிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு கூட்டம் தொடர்பாகவும் மூன்று நாட்களுக்கு முன்னர் கீழ்நிலை உறுப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்படல் வேண்டும்.

(IV) பீட மாணவர் ஒன்றியத்தின் கூட்டத்திற்கான கோரம் அதன் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்காக இருக்க வேண்டும். (மூன்றில் ஒரு பங்கு முழு எண் மற்றும் பின்ன எண் எனில், அடுத்த முழு எண் கோரமாக கருதப்படுகிறது.)

(V) தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் இல்லாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ ஒரு பீட கூட்டத்திற்கு தலைமை தாங்க முடியாவிட்டால், அங்கிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கு தங்களுக்குள் இருந்து ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(VI) தலைவர் கூட்டத்தை பொருத்தமாகவும் சரியானதாகவும் நடத்த வேண்டியதுடன் முடிவுகள் ஏகமனதாக அல்லது பெரும்பான்மை வாக்குகளால் கைகளை உயர்த்தி அல்லது இரகசிய வாக்கெடுப்பு மூலம் எடுக்கப்படுதல் வேண்டும்.

(VII) பீட மாணவர் சங்கத்தின் கூட்டத்தில் தலைவர் அல்லது துணைத் தலைவர் அல்லது வேறு எந்த உறுப்பினரும் முதன்மையான வாக்கினைக் கொண்டிருப்பதுடன் வாக்களிப்பில் சம வாக்குகள் இருந்தால், இதற்கு மேலதிகமாக தீர்மானமிக்க வாக்கினை வழங்குதல் வேண்டும்.

(VIII) செயலாளர் பீட மாணவர் சங்கத்தின் அனைத்து விவகாரங்களின் பதிவுகளையும் வைத்திருத்தல் வேண்டும் மற்றும் ஒரு கூட்டத்தின் நடவடிக்கைகளின் கூட்ட அறிக்கை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சங்கத்தின் உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

7. (I) பீட மாணவர் சங்க நிதி (இதற்கப்பால் பீட மாணவர் சங்க நிதி என குறிப்பிடப்படுகிறது) ஒவ்வொரு பீட மாணவர் சங்கங்களின் பொது நிதி விவகாரங்களுக்காக நிறுவப்படுதல் வேண்டும்.

(II) பீட மாணவர் சங்கத்தால் பெறப்படும் அனைத்துப் பணமும் பீடமாணவர் சங்க நிதியில் வரவு வைக்கப்படும் மற்றும் சங்கத்தின் சார்பாகச் செய்யப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளும் பீட மாணவர் சங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(III) பீட மாணவர் சங்க நிதியத்தால் பெறப்படும் அனைத்துப் பணமும் சங்கத்தின் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும். கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கு இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியில் வைப்பீடு செய்யப்படல் வேண்டும்.

(IV) மேற்கூறிய பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட ஒவ்வொரு காசோலையும் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட பொருளாளரால் கையொப்பமிடப்படல் வேண்டும். சிரேஷ்ட பொருளாளர் தவிர, தலைவர் அல்லது இளம்பொருளாளர் அவரது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

(V) வரவு செலவுத் திட்ட ஆவணம் அல்லது கூடுதல் மதிப்பீட்டில் அத்தகைய பணம் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, சிரேஷ்ட பொருளாளரால் அங்கீகரிக்கப்பட்டாலன்றி, பீட மாணவர் சங்க நிதியிலிருந்து பணம் செலுத்தப்படலாகாது.
ஒரு சிறப்பு தேவைகளின் போது, சிரேஷ்ட பொருளாளரின் அதிகாரத்துடன் பணம் செலுத்தலாம் மற்றும் இளைம் பொருளாளர் அவ்வாறு செலுத்திய பிறகு நடைபெறும் முதல் கூட்டத்தில் சங்கத்திற்கு அந்த கொடுப்பனவு தொடர்பாக அறிக்கையிடல் வேண்டும்.

(VI) சங்கத்தின் கணக்குப் புத்தகங்கள், சிரேஷ்ட பொருளாளர் அல்லது பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு மாணவராலும் பரிசீலனைக்கு உட்படுத்துவதற்காக இளம் பொருளாளரால் வழங்கப்படுதல் வேண்டும்.

8. (I) ஒவ்வொரு பீட மாணவர் சங்கத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்ய பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியினால் ஒரு கணக்காய்வாளர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(II) இளம் பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வியாண்டு முடிவதற்கு இரண்டு வாரங்களுக்குள் கல்வியாண்டிற்கான சங்கத்தின் வருமானம் மற்றும் செலவு அறிக்கை மற்றும் ஐந்தொகை அறிக்கையை சிரேஷ்ட பொருளாளர் ஊடாக கணக்காய்வாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(III) கணக்காய்வாளர் சிரேஷ்ட பொருளாளரிடமிருந்து வருமானம் மற்றும் செலவு அறிக்கை மற்றும் ஐந்தொகை அறிக்கையைப் பெற்ற ஒரு மாதத்திற்குள் பல்கலைக்கழகத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியிடம் அது குறித்த தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவர் அவ்வறிக்கையை பல்கலைக்கழகத்தினுள் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

9. இந்த விதிகளின் விளக்கம் தொடர்பான எந்தவொரு வினாவும் பேரவைக்கு அனுப்பப்படும் மற்றும் அதன் முடிவே இறுதியானது ஆகும்.

10. இந்த விதிகளில்,

”பிரதான நிறைவேற்று அதிகாரி” என்பது துணைவேந்தர் அல்லது தற்போதைக்கு துணைவேந்தரின் பணிகளைச் செய்யும் நபர் என்று பொருள்படும்.

"பேரவை" என்பது களனிப் பல்கலைக்கழகத்தின் பேரவை என்று பொருள்படும்.

"கல்வியாண்டு" என்பது மூதவை வேறுவிதமாக முடிவெடுக்காத வரை, ஒரு வருடத்தின் அக்டோபர் 01 ஆம் தேதி தொடங்கி அடுத்த ஆண்டு செப்டம்பர் 30 ஆம் தேதி முடிவடைகிறது.

**மாணவர் சங்க விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதம்**

9. (I) ஒவ்வொரு பீடத்தின் பதிவுசெய்யப்பட்ட இளமாணி மாணவரும், பீட மாணவர் சங்கத்தின் அலுவலராக அல்லது உறுப்பினராக தேர்தல் வேட்பாளராக பரிந்துரைக்கப்படுவதற்கு தகுதியுடையவர்.

திருத்தப்பட வேண்டிய விதம்

9. (I) ஒரு பீடத்தில் இறுதியாண்டு படிக்கும் பட்டப்படிப்பு மாணவர்களைத் தவிர, பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு பட்டதாரி மாணவரும் பீட மாணவர் சங்கத்தின் அலுவலர் அல்லது உறுப்பினர் தேர்தலுக்கு வேட்பாளராக பரிந்துரைக்கப்படுவதற்கு தகுதியுடையவர்கள்.

21. இந்த துணை விதியில்

"மாணவர்" என்பது களனிப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டப்பாடநெறிக்காக பீடத்தில் செல்லுபடியாகும் வகையில் பதிவுசெய்யப்பட்ட மாணவர் என்று பொருள்படும்.